
பேக்கரி மஹாராஜ
No.9,மார்த்தாண்டபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை – 622 001.
Customer Service : 9655662206
To Download our App Google Play
www.bakerymaharaj.com fssai 12420016000073



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வணக்கம் புதுக்கோட்டை
India's most trusted jeweller
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
தங்கம் • வைரம் • பிளாட்டினம் • சில்வர்
T.S.no : 2708, வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை- 622 001
Ph: 04322 220206



புதன் ❖ மே. 03, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 208 ❖ ரூ.10


### ராகுல்காந்தி மேல்முறையீட்டு மனு - இடைக்கால தடை விதிக்க குஜராத்

# ஐகோர்ட் மறுப்பு

## தீர்ப்பு நிறுத்திவைக்கப்படாததால் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல்



குஜராத் , மே,03_

**ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறை தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்க மறுப்பு தெரிவித்த குஜராத் உயர் நீதிமன்றம், இந்த வழக்கில் ஜூன் மாதம் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.**

2019-ல் கர்நாடகாவில் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, "எல்லா திருடர்களுக்கும் மோடி எனப் பெயர் வந்தது எப்படி?" என்று விமர்சித்தார். இது தொடர்பாக குஜராத் பாஜகஎம்எல்ஏ பர்னேஷ் மோடி சூரத்நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இதில் ராகுலுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, ராகுலின் எம்.பி. பதவி தகுதி இழப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில், சிறை தண்டனைக்கு தடை கோரி ராகுல் காந்தி குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை காரணமாக, அவர் எம்பி பதவியில் இருந்து தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், இந்த தண்டனைக்கு தடை உத்தரவு பிறப்பிக்காவிட்டால், அது ராகுல் காந்திக்கு, அவரைத் தேர்வு செய்த நாடாளுமன்ற தொகுதிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று வாதிட்டிருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த குஜராத் உயர் நீதிமன்றம், ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்துவிட்டது. மேலும், இந்த வழக்கில், நீதிமன்றத்தின் கோடைகால விடுமுறைக்குப் பின்னர் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் இறுதி உத்தரவு கோடை விடுமுறைக்கு பின்னரே அறிவிக்கப்படும் என்று நீதிபதி பிரஷஷக் தெரிவித்தார். மேலும், இடைக்கால உத்தரவு எதுவும் பிறப்பிக்கவும் அவர் மறுத்துவிட்டார். வரும் 8ம் தேதி முதல் ஜூன் மாதம் 3-ம் தேதிவரை நீதிமன்றத்திற்கு கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறைக்கு பின்னரே வழக்கில் தீர்ப்பு அளிக்கப்படும் என்று கோர்ட்டு தெரிவித்துள்ளதால் ராகுல்காந்திக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. அவதூறு வழக்கில் ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பு நிறுத்திவைக்கப் படாததால் அவர் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழகத்தில் தொழில் தொடங்க 5 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல்



சென்னை, மே,03_

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி வருகிற 7-ந் தேதி 2-ம் ஆண்டை நிறைவு செய்து 3-ம் ஆண்டை தொடங்குகிறது. இந்த சூழலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவையின் 12-வது கூட்டம் நேற்று காலை 11 மணிக்கு தொடங்கியகூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடந்தது. இந்த கூட்டத்தில் அமைச்சர்கள், தலைமைச்செயலாளர் இறையன்பு உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கேட்டர்பில்லர், பெட்ரோனஸ் உள்ளிட்ட 5 வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில், சில முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, 5 வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. கேட்டர்பில்லர், மலேசியாவைச் சேர்ந்த பெட்ரோனஸ் நிறுவனம் உள்ளிட்ட 5 நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர், அமைச்சர்களுடன் முதல்வர் சுமார் 20 நிமிடங்கள் ஆலோசனையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இக்கூட்டத்தில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதே போல்

குடியரசுத் தலைவர் வருகை, மதுரையில் திறக்கப்படவுள்ள கருணாநிதி நூற்றாண்டு நினைவு நூலகம், திருவாரூரில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள், மற்றும் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## திமுக ஆட்சியில் நேர்மையான அதிகாரிகளுக்கு இடமில்லை விஏஓ ராஜினாமாவை முன்வைத்து இபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை , மே, 3 -

**"திமுக ஆட்சியில் அரசு அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பு இல்லாததாலும், மக்கள் பணி செய்வதற்கு நிர்வாகமே தடையாக இருப்பதாலும் பல்வேறு நிர்வாக திறமையுள்ள அதிகாரிகளை இழந்து வருகிறோம்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.**

இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கடந்த வாரம் நேர்மையாக பணியாற்றிய விஏஓ தூத்துக்குடி மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டார். சில தினங்களுக்கு முன்னால் சேலம் மாவட்டத்தை சேர்ந்த மற்றொரு விஏஓ மணல் கொள்ளையர்களால் கொலை முயற்சிக்கு ஆளாக்கப்பட்டு காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்தார்.

2019 அதிமுக ஆட்சியில் சிறப்பாக பணியாற்றி என்னிடம் விருது பெற்ற கிராம நிர்வாக அதிகாரி அருப்புக்கோட்டை, களக்காரி விஏஓ துரை.பிருத்விராஜ் தற்போது தன் பணியை நேர்மையாக செய்ய இயலவில்லை என்பதால் வேலையை ராஜினாமா செய்துள்ளது வருத்தத்தை அளிக்கிறது. நேர்மையான அதிகாரிகளுக்கு இந்த ஆட்சியில் இடம் கிடையாது என்பதும் இதன்மூலம் நிருபணமாகிறது.

இவ்வாட்சியில் அரசு அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பு இல்லாததாலும், மக்கள் பணி செய்வதற்கு நிர்வாகமே தடையாக இருப்பதாலும் பல்வேறு நிர்வாக திறமையுள்ள அதிகாரிகளை இழந்து வருகிறோம்.

அரசு அதிகாரிகள் என்றும் மனம் தளராது, தொடர்ந்து மக்களுக்கு நல்ல பணிகள் பல செய்திட வேண்டுகோள் விடுக்கிறேன். விரைவில் கழக ஆட்சி மலரும், நிர்வாக திறமையோடு நேர்மையாக பணியாற்றும் அதிகாரிகளுக்கு முழு சுதந்திரமும் பாதுகாப்பு அளிக்கப்படும் என உறுதி கூறுகிறேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## உலகப் புகழ்பெற்ற கூத்தாண்டவர் கோவில் திருவிழா கோலாகலம் – திருநங்கைகள் பங்கேற்பு



கள்ளக்குறிச்சி, மே,03_

**கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற கூத்தாண்டவர் சுவாமி திருக்கோவில் சித்திரை திருவிழாவில் முக்கிய நிகழ்வான தாலி கட்டிக் கொள்ளும் நிகழ்ச்சி நேற்று இரவு வெகு விமர்சியாக நடைபெற்றது.**

கூவாகம் கூத்தாண்டவர் கோவில் திருவிழா கடந்த ஏப்ரல் மாதம் 18-ம்தேதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா ஆரம்பமானது, இவ்விழாவானது மகாபாரதத்தில் 18 நாட்கள் நடைபெற்ற போரின் நிகழ்வுகளை கொண்டாடும் வகையில் 18 நாட்கள் திருவிழா நடைபெறும், இவ்விழாவில் முக்கிய நிகழ்வான நேற்று இரவு சுவாமி திருக்கண் திறத்தல் நிகழ்ச்சி நடைபெற்று, தொடர்ந்து பக்தர்கள் மற்றும் திருநங்கைகள் பூசாரியின் கைகளால் தாலி கட்டிக் கொண்டனர்.

இவ்விழாவிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கர்நாடகா, மும்பை, கல்கத்தா, உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான திருநங்கைகள் வந்து கலந்துகொண்டு அருள்மிகு கூத்தாண்டவர் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டு, கூத்தாண்டவர் சுவாமியை தங்களது கணவனாக பாவித்து பூசாரியின் கைகளால் தாலி கட்டிக்கொண்டு இரவு முழுவதும் ஆடி, பாடி, கும்மியடித்து மகிழ்ந்தனர். மேலும் இவ்விழாவில் இப்பகுதியை சுற்றியுள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து பொதுமக்கள் வந்து கலந்துகொண்டு பொங்கல் வைத்து கூத்தாண்டவரை வழிபட்டு சென்றனர், இதனைத் தொடர்ந்து இன்று காலை திருத்தேர் வீதி உலா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, திருக்கோவிலூர் ஆகிய நகரங்களில் இருந்து சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்ராஜ் தலைமையில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து 1000-க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிதுறை மாவட்ட உதவி அலுவலர் சரவணன் தலைமையில் 53 தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்,


அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
சித்திரைப் பெருவிழாவிற்கு
வருகை தரும் பக்தகோடிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்!



23.04.2023 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம் காலை 10.35 மணிக்கு மேல் 10.50 மணிக்குள்
30.04.2023 ஞாயிற்றுக்கிழமை பட்டாபிஷேகம் காலை 7.05 மணிக்கு மேல் 7.29 மணிக்குள்
1.5.2023 திங்கள்கிழமை அருள்மிகு மீனாட்சி அம்மன் திக்குவிஜயம்
2.5.2023 செவ்வாய்க்கிழமை அருள்மிகு மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் காலை 8.35 மணிக்கு மேல்
3.5.2023 புதன்கிழமை திருத்தேரோட்டம் காலை 6.30 திருத்தேர் வடம் பிடித்தல்

டாக்டர் எஸ்.அனீஷ்சேகர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை
திரு.சரவணன், கூடுதல் ஆட்சியர் (ம) திட்ட இயக்குநர், மதுரை
திரு.மு.அரவிந்த் உதவி இயக்குநர் (ஊ) மதுரை
திருமதி. C.கீதா, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்
திரு.P.ராமமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்
திரு.A.பாப்பபத்தி, தலைவர் நாகமலைபுதுக்கோட்டை ஊராட்சி, திருப்பரங்குன்றம் (ஊ.ஒ)
திருமதி.V.தனலெட்சுமி, துணைத்தலைவர் (வார்டு எண் 8) நாகமலைபுதுக்கோட்டை ஊராட்சி, திருப்பரங்குன்றம் (ஊ.ஒ)

நாகமலைபுதுக்கோட்டை ஊராட்சி மன்ற அலுவலகம்
திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்






# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரியலூர் மாவட்டம் சுள்ளங்குடி மற்றும் பெரிய மணக்குடியில் கிராம சபை கூட்டம்



அரியலூர் மே 3

அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே சுள்ளங்குடி மற்றும் பெரிய மணக்குடி கிராமங்களில், மே தின கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், சுள்ளங்குடி கிராமத்தில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிராம சபைக்கூட்டம், மாவட்ட கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி, தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அவர் பேசுகையில்:-

இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தமிழ்ச்செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) பாலமுரளி, ஊராட்சி மன்றத்தலைவர் நடராஜன், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜாகிர் உசைன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அரியலூர் ஊராட்சி ஒன்றியம், பெரிய மணக்குடி ஊராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, அதன் தலைவர் சங்கீதா அசோக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் தேசிங்குராஜா தீர்மானங்களை படித்தார். அக்கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர் கண்ணகி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாப்பா பரமசிவம், மற்றும் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைப்பெற்றது பக்தர்கள் பரவசம்



மதுரை, மே, 3 -

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழாவின் 10ஆம் நாளான நேற்று காலை 8.40 மணிக்கு மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பெண்கள் புதிதாக திருமாங்கல்ய சரடு மாற்றி மகிழ்ந்தனர். விழாவையொட்டி விரிவாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி-சுந்தரேசுவரர் கோயில் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்.23 ஆம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் சுவாமி, அம்மன் மாசி வீதிகளில் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

அதனைத்தொடர்ந்து எட்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. அதனையொட்டி திங்கள்கிழமை 9-ம் நாள் திக்குவிஜயத்தைமுன்னிட்டு காலையில் மரவர்ணச் சப்பரத்தில்எழுந்தருளினர். மாலையில் இந்திர விமானத்தில் சுவாமி, அம்மன் எழுந்தருளினர்.

பத்தாம்நாளான நேற்று (மே 2) மேற்கு வடக்கு ஆடி வீதியிலுள்ளதிருக்கல்யாண மண்டபத்தில் திருக்கல்யாணம் காலை 8.40மணிக்கு நடைபெற்றது.

இதற்காக திருக்கல்யாண மேடையை பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மதுரை மல்லிகை, கனகாம்பரம், சம்பங்கிஉள்ளிட்ட உள்ளூர் ரகப் பூக்களும், பெங்களூரு ரோஸ்,வெளிநாட்டிலிருந்து தாய்லாந்து ஆர்க்கிட் மற்றும் பல வண்ண மலர்கள் உள்பட சுமார் 10 டன் மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. இவர்களுக்குஉதவிசெய்யும் பூக்கள் கட்டும் பணியில் ஆயிரக்கணக்கான பக்தர்களும் ஈடுபட்டிருந்தனர். வாழைமரத் தோரணங்களும் கோயில் வளாகம் முழுவதும் கட்டப்பட்டுவிழாக்கோலம் பூண்டுள்ளன.

இந்த திருக்கல்யாணத்தில் கட்டணதரிசனம்6ஆயிரம் பேரும், கட்டணமில்லா தரிசனம் 6 ஆயிரம் பேரும் என மொத்தம் 12 ஆயிரம் பேர் அமரும் வகையில் தகரப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தன. திருக்கல்யாணத்தில் பங்கேற்க திருப்பரங்குன்றத்திலிருந்து சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை, பவளக்கனிவாய்பெருமாள் திங்கள்கிழமை மாலையில் திருப்பரங்குன்றத்திலிருந்து புறப்பாடாகி நேற்று அதிகாலை 6 மணியளவில் கோயிலை வந்தடைந்தனர். திருக்கல்யாணம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து 11-ம் நாள் (மே 3) இன்று தேரோட்டங்கள் நடைபெறும். பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர், மீனாட்சி அம்மன் தனித்தனித் தேரில் எழுந்தருள்வர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வடம்பிடித்து இழுப்பர். மாசி வீதிகள் எங்கும் லட்சக்கணக்கானபக்தர்கள் தரிசனம் செய்வர்.

மே 4ஆம் தேதி நாளை தீர்த்தம் மற்றும் தேவேந்திர பூஜையுடன் திருவிழா நிறைவுபெறும். விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் கருமுத்து தி. கண்ணன், துணை ஆணையர் அருணாச்சலம் தலைமையில் கோயில் பணியாளர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.




# கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் ஆயிரமாயிரம் அறிவியல் திருவிழா தொடக்கம்



கந்தர்வகோட்டை, மே, 3 -

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டைஒன்றியம் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் ஆயிரமாயிரம் அறிவியல் தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வட்டாரக் கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி தலைமை வகித்தார். வட்டார வளமை மேற்பார்வையாளர் பிரகாஷ் வரவேற்றார்.

அக்கச்சிப்பட்டி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி முன்னிலை வகித்தார்.

வட்டாரக் கல்வி அலுவலர் நரசிம்மன் தொடங்கி வைத்து பேசியதாவது:-

மாணவ, மாணவிகள் கோடைகாலத்தில் நடைபெறும்ஆயிரமாயிரம் அறிவியல் திருவிழா சிறப்பாக நடைபெற இல்லம்தேடிக்கல்விமைய தன்னார்வலர்களுக்கு எளிய அறிவியல் சோதனை, என் கணித விளையாட்டுகள்,அறிவியல் அற்புதங்கள் உள்ளூர், வளங்களை வரைபடம் ஆக்குதல், ஆடலும் பாடலும்,கைத்திறனும் கற்பனையும் என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி பெற்ற தன்னார்வலர்களும், வானவில் மன்றம் கருத்தாளர்களும் இணைந்து மாணவர்களுக்கு ஆயிரமாயிரம் அறிவியல் திருவிழாவில் எளிய அறிவியல் பரிசோதனைகள் செய்து காண்பித்தனர். அதை ஒவ்வொருமாணவர்களும் பயன்படுத்தி அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், அறிவியல் அடிப்படை அறிவை வளர்க்க செய்முறை மிகவும் முக்கியமானது எனவும் கூறினார், கோடைகாலத்தில் நடைபெறும் அறிவியல் திருவிழாவை எளிய சோதனைகள் மூலம் ஒவ்வொருமாணவர்களும் கற்றுக்கொண்டு அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பேசினார்.

இல்லம் தேடிக் கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சுரேஷ்குமார்,பாரதிதாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வானவில் மன்ற கருத்தாளர்கள் தெய்வீக செல்வி,வசந்தி மாணவர்களுக்கு ஒரிகாமி, அறிவியல் சோதனைகள் செய்து காண்பித்தார்கள். தன்னார்வலர்கள் நித்யா, ஹேமலதா, புவனேஸ்வரி, சுவேதா ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக தன்னார்வலர் மாலினி நன்றி கூறினார்.

# பொன்னமராவதியில் நடந்த இரட்டை கொலையில் குற்றவாளிகள் நான்கு மாதங்களுக்கு பிறகு கைது



பொன்னமராவதி, மே, 3 -

பொன்னமராவதி அருகே வேந்தன்பட்டியில் நான்கு மாதங்களுக்கு முன்பு நடந்த இரட்டை கொலை சம்பவத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே வேந்தன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் பழனியப்பன். இவர் செட்டிநாடு கன்ஸ்ட்ரக்சன் எனும் பெயரில் கட்டுமான நிறுவனத்தை சொந்தமாக நடத்தி வந்தார். இவருக்கு ஏராளமான சொத்துக்கள் உள்ள நிலையில் இவருடைய நிறுவனத்தில் 100க்கும் மேற்பட்ட கட்டிட தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி அவரும் அவருடைய தாயாருமான சிகப்பி என்பவரும் அடித்து படுகொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் பொன்னமராவதி பகுதியையே உலுக்கியது. இந்நிலையில் நகை பணத்திற்காக கொலை செய்யப்பட்டனரா? அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக கொலை செய்யப்பட்டனரா என்ற கோணத்தில் பொன்னமராவதி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். மேலும் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதாபாண்டே, காவல் கூடுதல் கண்காணிப்பாளர் ரமேஷ் கிருஷ்ணன் தலைமையில் சுமார் ஐந்து தனிப்படைகள் அமைத்து போலீசார் குற்றவாளிகளை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் நேற்று பொன்னமராவதி காவல் ஆய்வாளர் தனபால் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்து ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமாக இடையபுதூர் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அடுத்த கல்லங்காலப்பட்டி கிராமத்தை சேர்ந்த சின்னய்யா மகன் சக்தி மற்றும் தேவகோட்டை அடுத்த உருவாட்டி மாவிலிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த சுந்தரம் மகன் அலெக்ஸ் என்ற அலெக்சாண்டர் ஆகியோரை பிடித்து விசாரணை செய்தபோது மேற்கண்ட இருவரையும் பணத்திற்காகவும் நகைக்காகவும் கொலை செய்ததாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும் இவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை போலீசார் மீட்டனர்.

இதனையடுத்து புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதாபாண்டே இரட்டை ஆயுத கொலை வழக்கில் சிறப்பாக பணிபுரிந்த தனிப்படை அதிகாரிகள் மற்றும் காவலர்களை நேரடியாக வரவழைத்து வெகுமதிகள் வழங்கி வெகுவாக பாராட்டினார்.

# லஞ்சம் கொடாதோர் இயக்கம் சார்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி, கோஷங்கள் எழுப்பி பேரணி



சீர்காழி, மே, 3 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகே தமிழ்நாடு லஞ்சம் கொடாதோர் இயக்கத்தின் சார்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.

விழிப்புணர்வு கூட்டத்தில் சென்னை உயர்நீதிமன்றவழக்கறிஞரும் மாநில பொதுச் செயலாளருமான விஜயரங்கம்கலந்துகொண்டு பொதுமக்களிடையே லஞ்சம் கொடுப்பதும், லஞ்சம் வாங்குவதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே லஞ்சம் கொடுப்பதை தவிர்க்க வேண்டும்எனவிழிப்புணர்வு கருத்துரை வழங்கினார்.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் வரைநகரின் முக்கியவீதிகள் வழியே விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கியும், கோஷங்கள் எழுப்பியவாரும் பேரணியாக சென்றனர். பேரணியில் லஞ்சம் கொடுப்பதற்கு எதிராக பதாகையை ஏந்தி சென்று வட்டாட்சியர் அலுவலகம் எதிரே லஞ்சத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

# நஞ்சை புகழூர் காவிரி ஆற்றில் கதவணை கட்டுமானப் பணியில் டோசர் வாகனம் கவிழ்ந்து நீரில் மூழ்கி ஓட்டுநர் உயிரிழப்பு



கரூர், மே, 3 -

கரூர் மாவட்டம் நஞ்சை புகழூர் காவிரி ஆற்றில் கதவணை கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த செயின் டோசர்வாகனம் கவிழ்ந்து நீரில் மூழ்கியதில் ஓட்டுநர் ராஜேஷ் மூச்சுத் திணறி உயிரிழந்தார். இதுகுறித்து வேலாயுதம்பாளையம் போலீஸார் வழக்கு பதிவு செய்து ராஜேஷ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர்.

கரூர் மாவட்டம் நஞ்சை புகழூர் காவிரி ஆற்றில் புதிய கதவணை கட்டும் பணி நடந்து வருகிறது. ஆற்றில் வரும் தண்ணீரை திருப்பி விடும் வகையில் 3 செயின் டோசர் (ஹிட்டாச்சி) வாகனங்கள் ஆற்றில் ஒரு ஓரத்தில் தண்ணீர் செல்லும் வகையில் பள்ளம் பறித்து பள்ளத்தில் எடுக்கும் மணலை கரைப்போல போடும் பணியில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகேயுள்ள பொத்தனூரை சேர்ந்தவர் ராஜேஷ் (35) ஓட்டுநர் உள்ளிட்ட 3 பேர் மேற்கண்ட பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது சுமார் காலை 10.45 மணியளவில் ராஜேஷ் இயக்கிய செயின் டோசர் வாகனம் மேட்டில் இருந்து சரிந்து தண்ணீர் நிரம்பிய ஆற்றின் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் வாகனத்துடன் ராஜேஷ் தண்ணீரில் மூழ்கினார். மூழ்கிய செயின்டோசரை மற்ற இரு செயின்டோசர் வாகனங்கள் மூலம் மீட்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். வாகனத்தை மீட்ட நிலையில் ஏசி கேபினுக்குள் சிக்கியிருந்த ராஜேஷை கேபின் கண்ணாடியை உடைத்து மீட்டனர். அவரை பரிசோதித்த 108 ஆம்புலன்ஸ் மருத்துவ பணியாளர் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து வேலாயுதம்பாளையம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, உடலை கைப்பற்றி பிரேதபரிசோதனைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**கனம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நீதிபதி அவர்கள் புதுக்கோட்டை**

**ந.க.எண்:8209/2022/அ6**

ப.பாண்டியன்,
S/O பழனிவேல்,
திருவாணைகாவன்பட்டி, தேக்காட்டூர் பஞ்சாயத்து, திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

**.....மனுதாரர்**

எதிர்
வட்டாட்சியர், திருமயம்.

**.....எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் **பாண்டியன்,** தனது தந்தை வழி தாத்தா **பிச்சைமுத்து (எ) பிச்சன்** என்பவர் கடந்த 19.08.1977ம் தேதியன்று திருவாணைகாவன்பட்டி,தேக்காட்டூர் பஞ்சாயத்து, திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை அறியவும்.

**பாண்டியன்,**
**மனுதாரர், திருவாணைகாவன்பட்டி,**
**தேக்காட்டூர் பஞ்சாயத்து**



சீர்காழி அருகே நெப்பத்தூர் கிராமத்தில் லலிதா என்பவரது பழைய ஓட்டு வீட்டில் வைக்கப்பட்டிருந்த வைக்கோல் எரிந்து சேதமானது. ஓட்டு கட்டிடத்தில் உள்ள கோடுகள் சேதம் ஆகி உள்ளது. தகவல் அறிந்த சீர்காழி மற்றும் மேலையூர் பகுதிகளில் இருந்து தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீ மேலும் பரவாமல் அணைத்தனர். இதுகுறித்து திருவெண்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தீ விபத்திற்கு உள்ளான ஓட்டு கட்டிடம் முன்பு பள்ளியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரியலூர் மாவட்டத்தில் கிராம பட்டாக்களை முழுமையாக கணினியில் பதிவேற்றம் செய்த அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் பாராட்டு



அரியலூர், மே, 3 -

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில்வேளாண் அடுக்கு திட்டத்தின் கீழ் கிராமப் பட்டாக்களை முழுமையாக கணினியில் பதிவேற்றம் செய்த அலுவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி நேற்று வழங்கினார்.

தமிழக அரசின் உத்தரவின்படி 13 துறைகளை ஒருங்கிணைத்து ஒற்றைச் சாளரமுறையில்வேளாண் அடுக்குத் திட்டத்தின்கீழ் விவசாயிகளின் அடிப்படை விவரங்கள் சேகரித்து இணையவழியில் பதிவேற்றம்செய்யும்பணி நடைபெற்று வருகிறது. அந்தவகையில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துவட்டங்களிலும் இப்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் முதலாவதாக செந்துறை வட்டம், அயன் தத்தனூர் கிராமத்தில் உள்ள 2799 பட்டாக்களை முழுமையாக 100 சதவீதம் கணினியில் பதிவேற்றம் செய்த கிராம நிர்வாக அலுவலர் அ.ராஜமாணிக்கம்,கிராம உதவியாளர் கோ.மீனா ஆகியோருக்கு, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இதே போன்று அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் அயன் தத்தனூர் கிராமத்தை போல பட்டாக்களை முழுவதுமாக கணினியில் பதிவேற்றம் செய்யும் பணியினைசம்மந்தப்பட்ட அலுவலர்கள் விரைவாக முடிக்கவேண்டும்எனவும் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் வருவாய்கோட்டாட்சியர் பரிமளம், வட்டாட்சியர் (செந்துறை) பாக்கியம் விக்டோரியா, வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம்: பொதுமக்கள் உறுதியேற்பு




தரங்கம்பாடி, மே, 3 -
மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியத்தில் மே 1-ஆம் தேதி தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் வரவேற்று பேசினார். இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். வீட்டுமனை பட்டா வேண்டி பொதுமக்கள் எம்எல்ஏவிடம் மனு கொடுத்தனர்.

இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) விஜயலட்சுமி, ஊராட்சி மன்றத் துணை தலைவர் சங்கீதா நாராயணன், ஊராட்சி செயலாளர் நாகராஜன் மற்றும் வார்டு உறுப்பினர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இதேபோல் எடுத்துகட்டி சாத்தனூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தலைவர் பைலட் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும் செம்பை தெற்கு ஒன்றிய திமுக அவை தலைவருமான ஆர்.மனோகரனுக்கு இரங்கல் தெரிவித்ததுடன் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, திருவிடைக்கழி ஊராட்சி மன்றத் தலைவர் கே.பி.ராஜா தலைமையிலும், கூடலூர் ஊராட்சியில் செல்வம் தலைமையிலும், மேமாத்தூர் ஊராட்சியில் தட்சணாமூர்த்தி தலைமையிலும், மே தின சிறப்பு கிராம கூட்டம் நடைபெற்றது.

ஊராட்சிகளில் நடைபெற்ற கிராம சபை கூட்டங்களில் பொதுமக்கள் அனைவரும் உறுதி மொழியாக சுகாதாரக் கேடு ஏற்படாமல் இருக்க எப்போதும் கழிப்பறையை மட்டுமே பயன்படுத்துவோம், குப்பைகளை தரம் பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்குவோம், எனது வீட்டில் இருந்து வெளியேறும் கழிவுநீரை தெருக்களில் தேங்கவிடாமல் பாதுகாப்பாக அகற்றுவோம், எப்போதும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிப்போம், கடைகளுக்கு செல்லும்போது துணிப்பையை உடன் எடுத்து செல்வோம், நமது கிராமத்தை எழில்மிகு கிராமமாக மாற்றும் முயற்சியில் நான் பங்கேற்பதுடன், குடும்பத்தினரையும் பங்கேற்க வைப்போம் என்று கிராம பொதுமக்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், தஞ்சை மண்டல திமுக தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக் மற்றும் கிராம மக்கள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெற்றோர்கள் தங்களது நோக்கங்களை மாணவர்கள் மீது திணிக்கக்கூடாது

## பள்ளி விழாவில் வழக்கறிஞர் சுமதி பேச்சு



சீர்காழி, மே, 3 -
சீர்காழி சுபம் கல்வி குழுமங்களின் 5-வது ஆண்டு விழா பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விழாவிற்கு இக்கல்வி நிறுவனங்களின் நிறுவனர் கியான்சந்த் தலைமை வகிக்க, பள்ளியின் தாளாளர் சுதேஷ் வரவேற்புரையாற்றினார். சுபம் லிட்டில் ஏஞ்சல்ஸ் தாளாளர் ஹர்ஷா சுதேஷ் சிறப்பு விருந்தினரை அறிமுகப் படுத்தினார்.

சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரும், சமூக சேவகரும், பட்டிமன்ற பேச்சாளருமான சுமதி கலந்து கொண்டு உரையாற்றினர். அவர் தனது உரையில், பெற்றோர்கள் தங்களது நோக்கங்களை மாணவர்கள் மீது திணிக்காமல், அவர்களின் நோக்கமறிந்து அவற்றை நிறைவேற்றிடவும், பெற்றோர்கள் ஆசிரியர்களின் கண்டிப்பினை தவறாக எடுத்துக் கொள்ளாமல், அவர்களோடு ஒத்துழைப்பு நல்கி சிறந்த மாணவர்களை உருவாக்கிட வலியுறுத்தினார். தேர்வு மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், 5 ஆண்டு காலம் சேவை புரிந்த ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

பள்ளி முதல்வர் வித்யா ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்களும், ஏராளமான பெற்றோர்களும் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியில் பள்ளி ஆசிரியை வசந்தி நன்றி கூறினார்.

### மேல்மருவத்தூர் அடிகளார் பிறந்தநாளை முன்னிட்டு


# இலவச கண் சிகிச்சை முகாம் கண் கண்ணாடிகள் வழங்கினார்



செங்கல்பட்டு, மே, 3 -
செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் ஆன்மீக குரு அடிகளார் பிறந்தநாளை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத் தலைமையில் நடைபெற்றது.

இதில்சிறப்புவிருந்தினராக ஆன்மீக இயக்க தலைவர் லஷ்மி பங்காரு அடிகளார், சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையின் மருத்துவர் மற்றும் இயக்குனருமான மீனா பாஸ்கர், ஆதிபராசக்தி மருத்துவமனையின் மருத்துவ இயக்குனர் டாக்டர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு கண் அறுவை சிகிச்சை செய்த 600- க்கும் மேற்பட்டோருக்கு இலவச கண் கண்ணாடிகளை வழங்கினர். இந்த முகாமில் மேல்மருவத்தூர் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களுக்கு மருந்து, மாத்திரைகள் மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

# திருவிளையாட்டம் கிராமத்தில் குசும்பு சீதளாம்பிகை மாரியம்மன் ஆலய தீமிதி திருவிழா

தரங்கம்பாடி, மே 3 -
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா திருவிளையாட்டம் கிராமத்தில் ஸ்ரீ குசும சீதளாம்பிகை மாரியம்மன் ஆலய 50 ஆம் ஆண்டு தீமிதி திருவிழா நடைபெற்றது.

இப்பூமண்டலத்தில் தேஜோமயமாய் விளங்கக்கூடிய தளங்கள் பல இருந்தாலும் திருவிளையாடல் செய்து திருநாவுக்கரசு நாயகருக்கும், வசிஷ்டர் இந்திராதி தேவர்களுக்கும் அனுக்கிரகம் செய்து சுயம்புவாகவே அவதரித்த ஸ்ரீ சுயம்பு நாத சுவாமி முல்லை வனநாயகி அம்பாள் ஆலயத்திற்கு தென்பாள் எழுந்தருளியுள்ள அருள்மிகு குசும சீதளாம்பிகை ஸ்ரீ மாரியம்மன் கோயிலின் 50-ஆம் ஆண்டு தீமிதி விழாவை முன்னிட்டு வீரசோழன் ஆற்றங்கரையிலிருந்து பக்தர்கள் காப்பு அணிந்து, கரகம் மற்றும் பால்காவடி, அலகு காவடிகளுடன் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக கோயிலை வந்தடைந்தது மாலை 7 மணி அளவில் 200-க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக் கடனை செலுத்தினர்.

தீமிதி திருவிழாவிற்கான ஏற்பாடுகளை திருவிளையாட்டம், ஈச்சங்குடி கிராமவாசிகள் மற்றும் வெண்கதிர் நற்பணி சங்கத்தினர் செய்திருந்தனர். தீமிதி திருவிழாவில் பெரம்பூர் காவல்துறையினர் திருக்கடையூர் தீயணைப்பு துறையினர் ஏராளமானோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலில் தேர் திருவிழா

## திரளான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்



திருக்கடையூர், மே, 3 -
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான புகழ்பெற்ற அமிர்தகடேஸ்வரர் உடனாகிய அபிராமி அம்மன் கோவில் உள்ளது. சிவபெருமான் கால சம்ஹார மூர்த்தியாக எழுந்தருளி மார்க்கண்டேயனுக்காக எமனை சம்ஹாரம் செய்ததால் அட்டவீரட்ட தளங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

தேவாரப் பாடல் பெற்ற இந்த கோவிலின் சித்திரை வசந்த உற்சவம் கடந்த 25 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 8 ஆம் நாள் திருவிழாவான நேற்று தேர் திருவிழா நடைபெற்றது. இதனை முன்னிட்டு கோவிலில் இருந்து அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர், கால சம்ஹார மூர்த்தி பஞ்ச மூர்த்திகளுடன் சிறப்பு அலங்காரத்தில் திருத்தேரில் எழுந்தருள சிறப்பு பூஜைகள், மகா தீபாராதனை நடைபெற்றது.

தேர் திருவிழா மகேஷ் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் பூஜைகளை நடத்தினர். தொடர்ந்து தருமபுரம் ஆதீனம் கட்டளை ஸ்ரீமத் சுப்பிரமணிய தம்பிரான் சுவாமிகள், திமுக ஒன்றிய செயலாளர் அமுர்த விஜயகுமார் தேரினை வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர்.

இதில் மாவட்ட குழு உறுப்பினர் துளசி ரேகா ரமேஷ், ஒன்றிய துணை தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமாலதி சிவராஜ், டீ மணல்மேடு ஊராட்சி மன்ற தலைவர் துரைராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. செந்தில், திமுக பிரமுகர் எழில்நம்பி உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரினை வடம் பிடித்து இழுக்க, நான்கு மாட வீதிகளையும் வலம் வந்த தேர் நிலையை அடைந்தது.

தேர் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை தருமபுரம் ஆதீன கோவில்களின் தலைமை கண்காணிப்பாளர் மணி தலைமையில் கோவில் உள்துறை சூப்பிரண்டு விருதகிரி மேற்பார்வையில் ஊழியர்கள் செய்திருந்தனர். பொறையார் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### இரண்டு கிலோ மீட்டர் தூரம்

# குண்டும், குழியுமாக காணப்படும் சாலைகளை சீரமைக்க அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை



சீர்காழி, மே, 3 -
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியிலிருந்து திட்டை செல்லும் சாலையில் உள்ள சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் குண்டும், குழியுமாக இருந்து வருகிறது. மேலும் திட்டை பகுதியில் உள்ள சின்னத்தம்பி நகர், விஜபி நகர், உள்ளிட்ட நகர் பகுதிகளுக்கான சாலைகள் ஜல்லி கற்களாக காணப்படுகிறது.

இச்சாலை வழியாக திட்டை, தில்லை விடங்கன், கிராமங்களுக்கு செல்லும் பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவிகள் பல்வேறு சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். சீர்காழியில் இருந்து திட்டை செல்லும் சாலையின் பாதி தூரம் நகராட்சிக்கு உட்பட்டது என்பதால் நகராட்சிக்கு உட்பட்ட பகுதி வரை சாலைகள் போடப்பட்டுள்ளது.

ஆனால் திட்டை ஊராட்சிக்கு உட்பட்ட எல்லையில் இருந்து சாலை குண்டும், குழியுமாக காணப்படுகிறது. கிராமத்தில் உள்ள மக்கள் ஓட்டுபோட மட்டும் வேண்டும். ஆனால் அவர்களுக்கு சாலை வசதி வேணாமா என அப்பகுதி மக்கள் ஆவேசம் அடைகின்றனர்.

இதைத் தொடர்ந்து சாலையை சீரமைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் சாலைகள் சீரமைக்க வில்லை. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் சாலையை சீரமைக்க கோரி சாலை மறியல் போராட்டம் அறிவித்திருந்தனர். ஆனால் அரசு அதிகாரிகள் சமாதான கூட்டம் போட்டு சாலையை சீரமைப்பதாக உறுதியளிக்கின்றனர். ஆனால் அதிகாரிகளின் உறுதியளிப்பு கண் துடைப்பாக மட்டுமே இருப்பதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# டாஸ்மாக் கடை அருகே கத்தியை காட்டி விளையாடி கொண்டு இருந்த போது இரட்டை கொலை

சென்னை, மே, 3 -
எண்ணூர் சுனாமி குடியிருப்பைச் சேர்ந்தவர் மனோஜ் (வயது 24), அதே பகுதியை சேர்ந்தவர் கோழி செல்வம் (வயது 32). இவர்கள் இருவரும் நண்பர்கள்.

நேற்று பிற்பகல் திருவொற்றியூர் எம்ஜிஆர் சாலையில் உள்ள மது பான கடைக்கு சென்றுள்ளனர். அப்போது இருவரும் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து குத்தி விடுவதாக விளையாடி கொண்டு இருந்தனர்.

கோழி செல்வம் தனது நண்பர் மனோஜை கத்தியை எடுத்து குத்தி உள்ளான்.



குற்றவாளி கோழி செல்வம்

இதைப்பார்த்து அருகில் இருந்த 55 வயது மதிக்கத்தக்க திருவேங்கடம் சத்தம் போட்டபோது அவரையும் குத்தி உள்ளான். இதில் இருவரும் நிலை குலைந்து கீழே விழுந்ததை பார்த்த பொதுமக்கள் போலீசார்க்கு தகவல் தெரிவித்தனர்.

புதுவண்ணாரப் பேட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இருவரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் ஏற்றி அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் ஏற்கனவே இருவரும் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

பேருந்தில் தப்ப முயன்ற கோழி செல்வத்தை புதுவண்ணாரப் பேட்டை காவல் ஆய்வாளர் கிருஷ்ணராஜ் கைது செய்து காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பாசன வாய்க்காலில் மீன் பிடிப்பதற்காக குழி வெட்டி தண்ணீரை வெளியேற்றியதால் விவசாயிகள் எதிர்ப்பு

## அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க ஆட்சியருக்கு விவசாயிகள் கோரிக்கை



சீர்காழி, மே, 3 -
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே தென்னலக்குடி கிராமத்தின் வழியாக திருவாலி ஏரிக்கு செல்லக்கூடிய பாசன வாய்க்காலில் மீன் பிடிப்பதற்காக மர்ம நபர்கள் சிலர் நள்ளிரவில் திருவாலி வாய்க்காலின் கரையை ஜேசிபி இயந்திரம் கொண்டு திருட்டுத்தனமாக 70 மீட்டர் வெட்டி வாய்க்காலில் இருந்த தண்ணீரை வெளியேற்றி உள்ளனர்.

மர்ம நபர்கள், பொதுப்பணித்துறை அதிகாரியின் துணையோடு வாய்காலை திருட்டு தனமாக வெட்டியுள்ளனர். அப்பகுதியில் தற்பொழுது கோடைகால சாகுபடியான பருத்தி, உளுந்து, பயிறு, தர்பூசணி, கிழங்கு உள்ளிட்ட பல்வேறு பயிர்களை விவசாயிகள் விவசாயம் செய்துள்ளனர். இதற்காக இந்த தண்ணீரை நம்பியுள்ளனர்.

தற்பொழுது மர்ம நபர்கள் இந்த பாசன வாய்க்காலில் இருந்து தண்ணீரை வெளியேற்றியதால் விவசாயிகள் ஆத்திரமடைந்தனர். இதனால் அந்த பகுதியில் இருந்த விவசாயிகள் ஒன்று திரண்டு வெட்டிய குழியை ஜேசிபி எந்திரம் கொண்டு மூடினர். இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரியிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியப் படுத்தியதால், அதிகாரிகளின் துணையோடு நடந்த இந்த செயலுக்கு விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் ஜல்லிக்கட்டு காளை தடுப்பு கட்டையில் மோதி படுகாயம்



புதுக்கோட்டை , மே.3-
முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் ஜல்லிக்கட்டு காளை தடுப்பு கட்டையில் மோதி படுகாயம் அடைந்ததையடுத்து சிகிச்சைக்காக ஒரத்தநாடு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான விஜயபாஸ்கர் ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டுள்ளவர்.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்காக போராட்டங்கள் நடந்து முடிந்த நிலையில் அடுத்தடுத்து நடந்த ஜல்லிக்கட்டுகளில் அவரது 'கொம்பன் காளை' வாடிவாசல்களில் 'நின்று' விளையாடி பெயர் வாங்கியது. இந்த மகிழ்ச்சி சில ஆண்டுகள் கூட நீடிக்கவில்லை. 4 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டிலேயே அதிகமான வாடிவாசல்களைக் கொண்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் தென்னலூர் ஜல்லிக்கட்டில் 'கொம்பன் காளை' பங்கேற்றது. "வாடியிலிருந்து கொம்பன் வரப்போகுது" என்று வர்ணனையாளரின் அறிவிப்பைத் தொடர்ந்து ஆக்ரோசமாக சீறிப்பாய்ந்து வெளியே வந்த கொம்பன் வந்த வேகத்தில் தடுப்புத் தூணில் மோதியதில் அடிபட்டு இறந்தது. இந்த இழப்பு அவரது குடும்பத்திற்கான பேரிழப்பாக கருதப்பட்டது. கொம்பன் காளையை தனது தோட்டத்திலேயே அடக்கம் செய்து நாள்தோறும் பார்த்து வருகின்றனர்.

அதன் பிறகு தான் வளர்க்கும் காளைகளுக்கு மறைந்த கொம்பன் பெயரையே வைத்து வெள்ளை கொம்பன், சின்ன கொம்பன், கருப்பு கொம்பன் என பல காளைகளை தோட்டத்தில் வளர்த்து வந்தார். காளைகளை பராமரிக்கவும் வாடிகளுக்கு கேரவேன்களில் ஏற்றிச் செல்லவும் பலர் விஜயபாஸ்கரிடம் வேலைக்கு உள்ளனர். இந்த நிலையில் நேற்று புதுக்கோட்டை மாவட்டம் வடசேரிப்பட்டி பிடாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு நடந்த ஜல்லிக்கட்டில் 800 காளைகளும் 300 மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டனர். இதில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரும் கலந்து கொண்டிருந்த நேரத்தில், அவரது 'கருப்புக் கொம்பன் காளை' வாடிவாசலில் இருந்து வரப்போகுது முடிஞ்சா புடிச்சுப்பாரு என்று வர்ணனையாளர் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் வீரர்கள் தயாராக, காளையுடன் வந்தவர்கள் துண்டுகளை வீசி வரவேற்க காத்திருந்த நேரத்தில் ரோஜா பூ மாலையுடன் வாடியிலிருந்து அதிவேகமாக சீறிப்பாய்ந்து வருவதைப் பார்த்த வீரர்கள் ஒதுங்கும் நேரத்தில் வந்த வேகத்தில் 'பழைய கொம்பன்' போல வாடிவாசல் தடுப்புக் கட்டையில் மோதி சரிந்தது.

அசைவற்று மயங்கிக் கிடந்த கருப்புக் கொம்பனை மீட்டு அவசர அவசரமாக ஒரத்தநாடு கால்நடை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். கருப்புக் கொம்பன் அடிபட்டதால் மனமுடைந்து காணப்பட்டார் விஜயபாஸ்கர். பிப்ரவரி மாதம் திருவப்பூர் ஜல்லிக்கட்டில் பங்கேற்ற கருப்புக் கொம்பன் காணாமல் போய் 2 நாட்களுக்கு பிறகு மீட்கப்பட்டு இந்த சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### தென்காசி மாவட்டம் புளியங்குடி

# அரசு மருத்துவமனையில் அறுவைசிகிச்சை துறையில் புதிய சாதனை



தென்கா, மே.3-
தென்காசி மாவட்டம் புளியங்குடி அரசு மருத்துவமனையில் அறுவைசிகிச்சை துறையில் புதிய சாதனை படைத்துள்ளனர் புளியங்குடி அரசு மருத்துவமனையில் பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கஇணை இயக்குநர் நலப்பணிகள் மருத்துவர் பிரேமலதா எம் டி, டி ஜி ஓ உத்தரவின்படி அறுவைசிகிச்சை நிபுணர் வருகைபுரிந்து சிகிச்சை அளித்து வருகிறார்.

இதன் மூலம் கட்டிகள், குடலிறக்கம், குடல்வால் வீக்கம், மூலம் , போன்ற நோய்களுக்கு இலவசமாக அறுவைசிகிச்சை செய்யபட்டு வருகிறது இந்நிலையில் புளியங்குடி நகரை சேர்ந்த 40 வயது பெண்மணிக்கு கர்பப்பை இறக்கம் நோயால் அவதிபட்டுவந்தார், அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு அறுவைசிகச்சை மூலம் கர்ப்பப்பையை அகற்றி சிகிச்சை அளிக்க முடிவு செய்தனர், இணை இயக்குநர் நலப்பணிகள் மருத்துவர் பிரேமலதா ஆலோசனைப்படி மருத்துவ அலுவலர் மருத்துவர் கோதரி யாசிர் அராஃபத் ,மயக்கவியல் நிபுணர் மருத்துவர் போத்திராஜ் , அறுவை சிகிச்சை மருத்துவர் மருத்துவர் அமல்ராஜ் மற்றும் செவிலியர்கள் அடங்கிய குழு அவருக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்தனர்.

இதன் மூலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே நடைபெறும் இதுபோன்ற சிக்கலான அறுவைசிகிச்சைகள் புளியங்குடி அரசு மருத்துவமனையில் வெற்றிகரமாக செய்து சாதனை படைத்துள்ளனர், மருத்துவர்களின் இந்த சாதனைகளை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் இலவசமாக நடைபெறும் மருத்துவ சேவைகளை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு மருத்துவ அலுவலர் கோதரி யாசிர் அராஃபத் கேட்டுகொண்டார்.









▶ பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு. சின்னப்பா அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் பெருங்கொண்டான்விடுதி அவரது நினைவிடத்தில் நடைபெற்றது. குன்றக்குடி பொன்னம்பலாடிகளார், சட்டமன்ற உறுப்பினர்கள் விஜயபாஸ்கர், முத்துராஜா, அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சுப்பையா, கவிஞர் தங்கமூர்த்தி, கம்பன் கழக செயலாளர் சம்பத்குமார், டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், வர்த்தக சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள், புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

# கறம்பக்குடி அருகே பழுதடைந்த நியாய விலை கடை கட்டிடம் சீரமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை

கறம்பக்குடி, மே. 3-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா துவார் ஊராட்சி கெண்டையம் பட்டியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் நியாய விலை கடை செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலை கடையில் குடும்பஅட்டைதாரர்கள் அரிசி உள்ளிட்ட பொருட்களை வாங்கி பயன்படுத்த வருகின்றனர்.




இந்த நியாய விலை கடை கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் கட்டிடத்தின் மேற்கூரை மூலம் மழைநீர் உள்பகுதிக்கு வந்து பொருட்கள் அனைத்தும் நனைந்து வீணாகி விடுகின்றன.எனவே அந்தப் பொருள்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவதால் அதை பயன்படுத்த முடியாத நிலையில் வாங்கி செல்கின்றனர்.தற்பொழுது கோடை மழை பெய்வதால் பொருட்கள் மழையில் நனைந்து காணப்படுகிறது. எனவே கெண்டையம்பட்டியில் இயங்கி வரும் நியாய விலை கடையின் கட்டிடத்தை சீரமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



▶ தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட திட்டமிடும் குழு உறுப்பினர் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துக்குமார், நகராட்சி ஆணையாளர் பாரிஜான், மாவட்ட ஊராட்சி செயலர் ராம்லால், மேலகரம் பேரூராட்சி செயல் அலுவலர் முனுசாமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# பொன்னமராவதியில் அதிமுக சார்பில் மேதின பொதுக்கூட்டம்

பொன்னமராவதி, மே.3-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பேருந்து நிலையம் எதிரில் உள்ள அம்மா திடலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் சார்பில் மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் வீட்டுவசதி வாரியத் தலைவரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அதிமுக செயலாளருமான பி.கே.வைரமுத்து சிறப்புரையாற்றினார்.



பொதுக்கூட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அதிமுக அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் வேந்தன்பட்டி பழனியப்பன் தலைமை வகித்தார், பொன்னமராவதி கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசி கண்ணப்பன், வடக்கு ஒன்றியச்செயலாளர் முருகேசன் ஆகியோர் வரவேற்புரை வழங்கினர், அதிமுக மகளிர் அணி இணைச் செயலாளர் கீர்த்திகா முனியசாமி தலைமைக்அதிமுக பேச்சாளர் கரந்தை கண்ணன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர், நகரச் செயலாளர் ராஜேந்திரன் நன்றியுரை வழங்கினார்.இந்த பொதுக்கூட்டத்தில் அதிமுக புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி செயலாளர் ஆலவயல் சரவணன், திருமயம் ஒன்றிய எம் ஜி ஆர் அணி நிர்வாகிகள் கொப்பனாபட்டி சுப்பிரமணியன், நெடுஞ்செழியன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு சாத்தையா, ஒன்றிய அதிமுக பொறுப்பாளர்கள் மோகனா சேகர் ஏடிஎம் ராஜா, வேகுபட்டி முத்து, வேந்தன்பட்டி சண்முகம், கண்டியாநத்தம் ராமன், திருக்களம்பூர் ராஜமாணிக்கம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வார்பட்டு மலைச்சாமி, கோவனூர் ராமசாமி,ஒன்றியகவுன்சிலர்கள் நகர நிர்வாகிகளான பராசக்தி, காரி.பழனியப்பன்,முத்துகிருஷ்னன்,பிரபு ,ராஜேந்திரன் மாமுண்டி செல்வம்,மலையாண்டி, ஜெகதீசன், பழனிஅண்ணா தொழிற்சங்கம் ஆதிமுத்து,செந்தில், அடைக்கன், ராஜா அதிமுக பேச்சாளர்கள் ஆட்டோ முருகேசன், ஆண்டிக்காளை உள்ளிட்ட அதிமுகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் வருகிற 5-ம் தேதி விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் மணி விழா

அரியலூர், மே.3-

அரியலூரில் வருகிற 5-ம் தேதி விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் மணிவிழா நடைபெறுகிறது. இது பற்றி விடுதலை சிறுத்தைகள் கட்சியின், அரியலூர் மாவட்ட அமைப்பாளர் க. பாலசிங்கம் வெளியிட்ட செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது,



அரியலூர், கொல்லாபுரத்தில் உள்ள தொல்காப்பியர் அரங்கத்தில், மே 5-ம் தேதி மாலை 4 மணிக்கு, வணிகர் தினத்தை முன்னிட்டு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வணிகர் அணி ஒருங்கிணைத்து நடத்தும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் மற்றும் சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் மணிவிழா, மற்றும் வணிகர் அணி மாநாடு உள்ளிட்டவை, கட்சியின் வணிகர் அணி மாநில செயலாளர் செல்வராசு தலைமையில் நடைபெறுகிறது, மாநில துணை செயலாளர் சிவா என்கிற செங்கதிர் வரவேற்று பேசுகிறார்.

விடுதலை சிறுத்தை கட்சியின் நிர்வாகிகள் பலரும் முன்னிலை வகிக்கும் இம்மாநாட்டில், கட்சித் தலைவரும், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் எழுச்சி உரையாற்றுகிறார், கட்சியின் பொதுச்செயலாளர்கள் சிந்தனைச் செல்வன் எம்எல்ஏ, துரை ரவிக்குமார் எம்பி, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி .வி. கணேசன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம். எல்.ஏ, காங்கிரஸ் கட்சியின் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் அரியலூர் சின்னப்பா(மதிமுக மாவட்ட செயலாளர்), ஜெயங்கொண்டம் க.சொ.க. கண்ணன், சமத்துவ மக்கள் கட்சி தலைவர் எர்ணாவூர் நாராயணன், கோயம்பேடு வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் ராஜசேகர், திமுக கொள்கை பரப்புச் செயலாளர் பெறுநற்கிள்ளி, விசிக துணைப் பொதுச் செயலாளர் எஸ். எஸ். பாலாஜி எம் எல் ஏ, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ், ஊடகப்பிரிவு முதன்மை செயலாளர் பனையூர் பாபு உள்ளிட்டோர் கருத்துரை பேசுகிறார்கள்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில, மாவட்ட, தொகுதி, ஒன்றிய, நகர நிர்வாகிகள், மற்றும் அரியலூர் மாவட்டத்துக்கு உள்பட்ட அரியலூர், ஜெயங்கொண்டம், செந்துறை, திருமானூர், தா.பழூர், ஆண்டிமடம், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் கட்சி நிர்வாகிகள், உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ அரியலூரில் அதிமுக சார்பில் நடைபெற்ற மே தின பொதுக்கூட்டத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அரசு தலைமை கொறடவுமான தாமரை எஸ் .ராஜேந்திரன் பேசினார், அருகில் முன்னாள் எம்எல்ஏ ஜெயங்கொண்டம் ராமஜெயலிங்கம், மாவட்ட பொருளாளர் அன்பழகன், ஒன்றியச் செயலாளர்கள் பொய்யூர் பாலசுப்பிரமணியன், செல்வராஜ், கல்யாண சுந்தரம், வடிவழகன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருமயம் ஒன்றியம் ரா ரா புரம் ஊராட்சியில் மே தின சிறப்பு கிராமசபா கூட்டம்

திருமயம், மே.3-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஒன்றியம் ராராபுரம் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் முருகேசன் தலைமையில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது.



கூட்டத்தில் ஒன்றிய அலுவலர் சரவணன் கலந்துகொண்டு கூட்டத்தை துவக்கினார், மேலும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர், பொதுமக்கள் குறைகளை அறிந்து விளக்கம் அளித்தார் மற்றும் வரவு செலவு கணக்கு பணியின் தன்மை குறித்து விளக்கம் அளித்தார், மேலும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர், கூட்டம் முடிவில் ஊராட்சி மன்றத் தலைவர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# அன்னைதெரசா படம் பொறித்த விபூதி பாக்கெட்டுகள் அண்ணாமலையார் கோவில் அர்ச்சகர்கள் சஸ்பெண்ட்

தி.மலை, மே. 3-

பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் தினமும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்நிலையில் திங்கள்கிழமை விடுமுறை தினம் என்பதால் பக்தர்கள் அதிக அளவில் சாமி தரிசனம் செய்து வந்தனர்.




அப்போது பிரபல ஆடை தயாரிப்பு நிறுவனமான மெத்யூவ் கார்மென்ட்ஸ் முன்பக்கம் அண்ணாமலையார் படமும் பின்பக்கம் அன்னை தெரசா படம் மற்றும் அந்த நிறுவனத்தின் பெயரும் பொறித்த விபூதி பாக்கெட்டுகளை பிரசாதமாக பக்தர்களுக்கு அளித்து வந்தனர். இது குறித்து இந்து முன்னணியினர் கோயில் இணை ஆணையர் குமரேசனிடம் முறையிட்டனர்.


இது போன்று பக்தர்களை மதமாற்றம் செய்ய தூண்டும் வகையில் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள் ஆகவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இதை தொடர்ந்து இந்து முன்னணியினர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அண்ணாமலையார் கோவில் இணை ஆணையர் குமரேசன் இந்த செயலில் ஈடுபட்ட சோமநாத குருக்கள், முத்துக்குமாரசாமி குருக்கள் ஆகிஇருவரையும் 6 மாதத்திற்கு பணியிடை நீக்கம் செய்துள்ளார். மேலும்அவர்கள்இருவரும் திருக்கோவிலில்இந்த6மாத காலத்தில் சாமிக்கு எந்த அபிஷேகம் ஆராதனைகள் செய்யக்கூடாது எனவும் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

# தமிழகத்தில் இன்று முதல் ரேஷன் கடைகளில் கேழ்வரகு

## நீலகிரியில் தொடக்கம்

நீலகிரி, மே. 3-

நீலகிரி மாவட்டம் உதகையில் செய்தியாளர்களிடம் பேசிய உணவுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், ‘தமிழக முதல்வர் குடும்ப அட்டைதாரருக்கு ராகி(கேழ்வரகு) வழங்கப்படுமென ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் உதகை அருகே உள்ள பாலகொலா மலை கிராமத்தில் இன்று தொடங்கப்படும் என்றும் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரிய கருப்பன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமசந்திரன் ஆகியோர் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.



இத்திட்டத்திற்காக 1,350 மெட்ரிக் டன் கேழ்வரகு மத்திய உணவுக் கழகத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யபட்டு உள்ளதாகவும், அதில் நீலகிரி மாவட்டத்திற்கு மாதத்திற்கு 400 மெட்ரிக் டன் தேவை. ஆனால் தற்போது 482 மெட்ரிக் டன் கேழ்வரகு இருப்பு வைத்துள்ளதாகவும் இத்திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் 2.29 லட்ச குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 2 கிலோ ராகி வழங்கபடும் என்றார்.

தமிழகம் முழுவதும் விநியோகம் செய்யும் அளவுக்கு ராகி இல்லாததால்நீலகிரிமற்றும் தர்மபுரி மாவட்டங்களில் முதல் முறையாக தொடங்கபடுவதாகவும் பின்னர் படிப்படியாக தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தபடும் என்றார்.

கூட்டுறவு துறை மூலம் சிறு தானியங்கள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வேளாண் துறையுடன் இணைந்து சிறுதானியம்கொள்முதல் நிலையங்கள் திறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆவுடையார்கோவில் அருகே குடிநீர், சாலை வசதி அரசு மதுபான கடையை அகற்ற கோரி ஆர்ப்பாட்டம்

ஆவுடையார்கோவில், மே. 3-

குடிநீர் கேட்டும் சாலை வசதி கேட்டும், அரசு மதுபான கடையை அகற்ற கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, பின்பு டாஸ்மார்க் கடையை மூட வலியுறுத்திய பாரதிய ஜனதா கட்சியின் மாநில நிர்வாகி வேலூர் இப்ராஹிம் மற்றும் நிர்வாகிகளை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.




புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் தாலுகாவில் உள்ள திருப்புனவாசல் பகுதியை சுற்றி சுமார் 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் சரியான குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகின்றனர் அதை சரி செய்ய கோரியும். திருப்புனவாசல் தேர் ஓடும்நான்கு வீதிகளையும் விரிவுபடுத்தி தார் சாலை அமைக்க கோரியும் ..

திருப்புனவாசலில் உள்ள சிவன் மற்றும் விநாயகர் கோவில்களுக்கு வெளிமாநில வெளி மாவட்ட சிவனடியார்கள் மற்றும் சுற்றுவட்டார பொதுமக்கள் பக்தகோடிகள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர், அவர்களுக்கு இடையூறாக உள்ள அரசு மதுபான கடையை அகற்றக் கோரியும் பாரதிய ஜனதா சிறுபான்மை பிரிவு தேசியத் தலைவர் வேலூர் இப்ராஹிம் பாரதிய ஜனதா ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றிய தலைவர் சேகர், பாரதிய ஜனதா கட்சியின் மாவட்டத் தலைவர் செல்வம் அழகப்பன், பாரதிய ஜனதா தெற்கு ஒன்றிய பொருளாளர் செல்வவிநாயகம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகளும் தண்ணீர் வேண்டி அங்கு காத்திருந்த பெண்களும் ஒன்று சேர்ந்து அதே பகுதியில் உள்ள டாஸ்மார்க் கடையை மூட கோரிக்கை வைத்து டாஸ்மார்க் கடைக்கு நடை பயணமாக சென்றனர், அப்பொழுது அங்கு இருந்த காவல் துறையினர் அவர்களை மரித்து டாஸ்மார்க் கடைக்கு செல்ல விடாமல் தடுத்தனர், அவர்கள் மீண்டும் அதே இடத்தில் கண்டன கோஷம் எழுப்பினர், பிறகு ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகளிடம் பேசி 15 நாட்களில் குடிநீரும் சரி செய்யப்படும், மதுபான கடையும் அகற்றப்படும் என்று உறுதி அளித்ததன் பேரில் கண்டன கோஷத்தில் ஈடுபட்ட ஆண்களும் பெண்களும் பாரதிய ஜனதா கட்சியினரும் கலைந்து சென்றனர், அதனால் திருப்புனவாசல் பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ராகுல்காந்திக்கு எதிரான தீர்ப்பை நிறுத்தி வைக்க ஐகோர்ட் மறுப்பு

# பொன்னமராவதி இரட்டை கொலை 4 மாதங்களுக்குப் பிறகு 2பேர் கைது





# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் காளைக்கு தீவிர சிகிச்சை


| சென்னை / புதுக்கோட்டை | 03.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|


புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வே. கி. கிருஷ்ண மேனன்** , இந்திய அரசியல்வாதி (பி.1896) (இ.1974)



**டி. எஸ். சொக்கலிங்கம்** , தமிழக இதழியலாளர், எழுத்தாளர், விடுதலைப் போராளி (பி.1899) (இ.1966)



**உமா பாரதி** , மத்தியப் பிரதேசத்தின் 16வது முதலமைச்சர் (பி.1959)



## இன்றைய நினைவு நாள்

**சிவாஜி** , மராட்டியப் பேரரசர் (பி.1627) (இ.1680)



**சாகீர் உசேன்** , இந்தியாவின் 3வது குடியரசுத் தலைவர் (பி.1897) (இ.1969)



**ஆர். நடராஜ முதலியார்** , தமிழகத் திரைப்படத்துறையின் முன்னோடி (பி.1885) (இ.1971)



## உலக பத்திரிகை சுதந்திர நாள்